Register Number | | | | | |

**Part III — Vocational Subjects**

**(Common for Vocational Component and Vocational Subjects)**

**OFFICE SECRETARYSHIP — Paper II**

# தமிழ் சுருக்கெழுத்து / SHORTHAND — TAMIL

**( Practical )**

நேரம் : 2 மணி 30 நிமிடங்கள் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

I. கீழ்க்கண்ட குறித்தொடரிலுள்ள சொற்களை வரி வடிவத்தில் எழுதுக : $10 \times 1 = 10$



II. அ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொற்களுக்கு சுருக்கெழுத்தில் தனி குறிச்சொற்கள் எழுதுக : $10 \times 1 = 10$

1. விஞ்ஞானம்
2. கம்யூனிஸ்டு
3. மறுபடி
4. தீர்மானமாய்
5. சாச்வதமாய்
6. அவர்கள்
7. வருஷமாய்
8. காரிய
9. தடவை
10. நம்பர்.

ஆ) பின்வரும் குறித்தொடரிலுள்ள சொற்றொடர்களை வரி வடிவத்தில் எழுதுக : $10 \times 1 = 10$



III. அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்குச் சுருக்கெழுத்தில் சுருக்கங்கள் எழுதுக : $10 \times \frac{1}{2} = 5$

1. அப்பொழுதாவது
2. அந்தச்சமயத்தில்
3. அவ்வாறு செய்கையில்
4. நாளடைவில்
5. அபிப்ராயங்கள்
6. அதுமட்டுமல்ல
7. தெள்ளத்தெளிவாய்
8. படிப்படியாக
9. அதுவரை
10. ஏற்படுத்த.

[ Turn over

ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கங்களை வரி வடிவத்தில் எழுதுக : $10 \times \frac{1}{2} = 5$




IV. அ) கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றிற்கு சுருக்கெழுத்தில் பிரத்தியேக சுருக்கங்கள் எழுதுக : $10 \times \frac{1}{2} = 5$

1. பல்வேறு ஸ்தாபனங்கள்
2. ஆங்கிலேயர்
3. கூட்டுறவு நெசவாளர்
4. கஷ்ட நஷ்டம்
5. ஐ. நா. ஸ்தாபனம்
6. ஜனத்தொகை
7. அன்பு இல்லாதார்
8. நிலப்பிரச்சனை
9. பண வசதி
10. உரிமையுண்டு.

ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றிற்கு வரி வடிவத்தில் பிரத்தியேக சுருக்கங்கள் எழுதுக : $10 \times \frac{1}{2} = 5$




V. அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கெழுத்துப் பகுதியை வரி வடிவத்தில் எழுதுக : 15



ஆ) கீழ்க்கண்ட வரி வடிவப் பகுதியைச் சுருக்கெழுத்தில் எழுதுக : 15

தமிழ் நாட்டிலே கல்வியின் தரத்தை உயர்த்தவும், அதன் நிலையை மேம்படுத்தவும் சம்பந்தப்பட்ட எல்லோரும் முயற்சி எடுக்க வேண்டும். மத்திய ஆட்சியில் உள்ள கல்வித்துறையினரும், மாநிலங்களில் உள்ள கல்வித்துறையினரும், கல்வி நிபுணர்களும் ஒன்றுகூடி ஆழ்ந்து ஆலோசனை செய்து வருங்காலத்தில் கல்வி முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை உருவாக்க வேண்டும்.

VI. அ) கீழ்க்கண்ட பகுதியின் சுருக்கப் பொழிப்பை (இதன் நீளத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமல்) அளிக்கவும் : 10

இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் மகளிர் நலம் பேண பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவைகள் முறைப்படி நிறைவேற்றப்பட்டும் வருகின்றன. அதனால் வாழ்க்கை முறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கிராமப் புறங்களில் இருந்து வேலை தேடி நகரங்களுக்கு வந்து குடியேறும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள். பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் ஆங்காங்கு தனியே அமைக்கப்பட வேண்டும். தனியார் தொண்டு நிறுவனங்கள் இத்தகைய நற்பணியை செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேலைக்குச் செல்லும் பெண்களின் குழந்தைகளை பேணிக்காக்க பாலர் பள்ளிகள் மாநிலமெங்கும் பரவலாக தொடங்கப்பட்டுள்ளன. இங்கு விளையாட்டின் மூலம் கல்வி கற்பிக்கின்றனர்.

உடல் நலம் காக்க உதவியாக இருப்பது விளையாட்டு என்று சொன்னால் அது மிகையாகாது. நமது மாநிலத்தில் உள்ள கல்வி நிலையங்கள் உடற்பயிற்சிக்கும், விளையாட்டுக்கும் தொடர்ந்து சிறப்பிடம் அளித்து வருகின்றன. மாவட்ட, மாநில விளையாட்டுப் போட்டிகள் குறித்த காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் மாணவர்கள் மட்டுமின்றி பொதுமக்களும் பங்கு பெறுகின்றனர். கிராமப் புறங்களிலும் பந்தய விளையாட்டுக்கள் நல்ல ஆர்வத்தோடு நடக்கின்றன. ஆங்காங்கு விளையாட்டு அரங்கங்கள் கட்டுவதற்காக இந்த ஆண்டு இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[ Turn over

ஆ) பின்வரும் பத்திகளைப் படித்துப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்கெழுத்தில் விடையளிக்கவும் : 10

கல்லூரி மிகச் சிறந்த அளவுக்கு வளர்ச்சி அடைவதற்கு அடிப்படைக் காரணம் நிறுவனத்தின் தலைவரும், நீண்டகால நண்பர்கள் மற்றும் மாணவர்களும் ஆவார்கள். நாட்டு மக்கள் அனைவரும் கல்வியறிவு பெறவேண்டும் என்பதிலும் அதிலும் குறிப்பாகப் பெண்கள் கல்வி பெறுவதன் மூலம்தான் நாடு முன்னேற முடியும் என்பதிலும் தமிழகம் திடமான நம்பிக்கை கொண்டுள்ளது.

நாட்டில் எத்தனையோ பள்ளிகள் இருந்தாலும் எத்தனையோ கல்லூரிகள் இருந்தாலும் குறிப்பிட்ட ஒரு சில பள்ளிகளையும் கல்லூரிகளையும் தான் பொதுமக்கள் நாடுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்கு சிறந்த ஆசிரியர்கள் இருக்கிறார்களோ, எங்கு நிறுவனங்கள் நல்லமுறையில் இயங்குகின்றனவோ, அங்குதான் தங்களுடைய பிள்ளைகள் கட்டுப்பாட்டுடனும் ஒழுங்குடனும் கல்வி கற்று முன்னேற முடியும் என பெற்றோர்கள் நினைக்கிறார்கள்.

கல்லூரி தலைசிறந்து விளங்குவதற்கு உறுதுணையாக உள்ள ஆசிரியர்களையும் நிர்வாகத்திலுள்ள அனைவரையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மக்களாட்சி சிறந்து விளங்குவதற்கும், நாடு பற்பலதுறைகளில் முன்னேற்றம் அடைவதற்கும் அனைத்து மக்களும் கல்வி கற்றவர்களாக இருக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். முன்னேறிய நாடுகளின் வளர்ச்சிக்கு இதுவே அடிப்படையானது என்பது அறிஞர்கள் பலருடைய கருத்தாகும். பல்வேறு இயற்கை வளங்களைப் பெற்றுள்ள நாம் விரைவில் முன்னேற்றம் அடையாமல் இருப்பதற்கு 'அனைவருக்கும் கல்வி' என்ற குறிக்கோளை இன்னும் அடையாமல் இருப்பதேயாகும். இந்த நிலைமையை மாற்றிமைப்பதற்கு அரசுகளும் மற்றும் தனியார் நிறுவனங்களும் முன் வரவேண்டும்.

***வினாக்கள் :***

1) கல்லூரி வளர்ச்சி அடைய காரணமாக உள்ளவர்கள் யார் யார் ?

2) யார் கல்வி பெறுவதன் மூலம் நாடு முன்னேற முடியும் என்ற நம்பிக்கை உள்ளது ?

3) மாணவர்கள் கல்வி பயில குறிப்பிட்ட ஒருசில பள்ளி கல்லூரிகளைத்தான் பெற்றோர்கள் நாடுகிறார்கள். ஏன் ?

4) கல்லூரி தலை சிறந்து விளங்குவதற்கு உறுதுணையாக உள்ளவர்கள் யார், யார் ?

5) மக்கள் கல்வி கற்றவர்களாக இருக்க வேண்டிய அவசியம் ஏன் ?